காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் முசரவாக்கம் கிராமத்தை சார்ந்த மாற்றுக் கட்சியைச் சார்ந்த தோழர்கள் ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.குமார் தலைமையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் ஜி.செல்வம், உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர் ஞானசேகரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மலர்கொடிகுமார், தேவேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.மாரிமுத்து, இரா.இளஞ்செழியன், அ.வேலுச்சாமி, எஸ். தமிழ்செல்வன், எம்.மகேந்திரன், கே.கார்த்திகேயன், கே.எம்.சம்பத், க.தமிழரசன், முசரவாக்கம் ஊராட்சி துணை தலைவர் சங்கர், மாற்று கட்சி சார்ந்த முசரவாக்கம் வார்டு உறுப்பினர் டி.முருகன் அவர்களுடன் 25–மேற்பட்டவர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணணத்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி

தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, டிச. 25-

பெருநகர சென்னை மாநக ராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு வருமாறு:

பெருநகர சென்னை மாநக ராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோச னைக் கூட்டம், வருகின்ற 27.12.2024 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ரிப் பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனை கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலை வர் ந.இராமலிங்கம் தலைமை யில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் ஆர். பிரியா மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களும் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்ற வுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினா;கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 30.12.2024 அன்று நடைபெறும் மாமன்ற கூட்டம் தொடா;பாக.

இவ்வாறு எ.நாகராஜன் அறிவித்துள்ளார்.

ஒன்றிய செயலாளர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில்

பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் விழா!

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – கழக கொடி ஏற்றி ஆயிரம் நபர்களுக்கு உணவு வழங்கினார்!

திருவள்ளூர் டிச 25;

கழக இளைஞர் அணி செய லாளர் தமிழ்நாடு துணை முத லமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பள்ளிப் பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் கொல்லாலகுப் பம் ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் சி. ஜெ.சீனிவாசன், ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடை பெற்றது இதில்திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலா ளர் த திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக் டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டு கழக புதிய கல் வெட்டை திறந்து வைத்து கழக கொடியேற்றி 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி சட்டமன்ற தொகுதி பார்வை யாளர் ச.சண்முகநாதன், மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.எ.நாகலிங் கம், பள்ளிப்பட்டு பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் சி. ஜெ. செந்தில்குமார், ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன், கொல்லாலகுப் பம் ஊராட்சி மன்ற தலைவர் சி.புஷ்பலதா லோகநாதன், பள் ளிப்பட்டு பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.மணிமேகலை மகேந்திரன், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் டி.எஸ்.ஷியாம் சுந்தர்,திருத்தணி நகர மன்ற உறுப்பினர் கே.எஸ். அசோக் குமார் ஒன்றிய கழக நிர்வாகிகள் முத்து, டி.செங்கய்யா, கே.ஆஞ் சநேயன், ஒன்றிய கவுன்சிலர் எஸ்.கே.சேகர், பள்ளிப்பட்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் கள் எம்.குணசேகர், கபிலா வி.சிரஞ்சீவி, ஸ்வப்னா கே.முரளி, பானுஜெகதீஷ், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.ஹரி, த.ஜெகதீசன், ஜெ.சுபான், ஜி.மனோகரன், எ.கே.ரவி, பி.கேசவன், ஈ.எத்திராஜ், எ. ஹரிபாபு ஒன்றிய இளைஞரணி பள்ளிப்பட்டு எஸ்.ஏ.கலீல், என்.சந்திரபாபு ஆர்.ராமன், (எ) பாண்டி., , கொல்லாலகுப்பம் ஊராட்சி கிளை நிர்வாகிகள் ஆர். பரசுராமன், துளசிராமன், ஜானகிராமன், ராம்கி, பாபு, சுந் தரமூர்த்தி, சங்கரன், நவுஷாத், சந்திரபாபு, வைகுந்தன், கே.ஆறுமுகம், சாம்பசிவம், ரவி, உதயசூரியன் ஜெ.லோகநா தன், ஷபீர், கிளைக் கழக நிர் வாகிகள் கருணாமூர்த்தி, ரகு பதி, தண்டபாணி, முனியய்யா, சுப்பாராவ், குமார் முருகையா ஜானகிராமன் ஏழுமலை ஏகாம் பரம் மோகன்ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெரும் திரளாக பங் கேற்றனர்.இந்நிகழ்ச்சியின் இறு தியில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜே. தண்ட பாணி. நன்றி உரையாற்றினார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில்

மகளிர் சுய உதவிக்குழுக்களின் 'உணவுத் திருவிழா'!

ரூ. 1 கோடியே 50 லட்சம் மதிப்பிலான உணவுப் பொருள்கள் விற்பனை!

சென்னை,டிச.25-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ் வாதார இயக்கம் சார்பில் மக ளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை, தமிழ் நாடு துணை முதலமைச்சர் உத யநிதி ஸ்டாலின் அவர்கள் 20.12.2024 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் துவக்கி வைத்தார்.

பொதுமக்கள் ஆதரவுடன் வெற்றித் திருவிழாவாக நடை பெற்ற இந்த உணவுத் திருவிழா வில், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த 286 வகையான சைவ மற்றும் அசைவ உணவுகளை, 65 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மக ளிர் உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமா றும் வகையில் 35 அரங்குகளும், உணவுத் தரச் சான்றிதழ் (FSSAI) பெற்ற குழுக்களைச் சேர்ந்த 365 மகளிர் 520 வகையான ஆயத்த உணவுப் பொருட்களை (Ready to Eat) சுகாதாரமான முறையி லும், கலப்படம் ஏதுமின்றியும் தயாரித்து, தகுந்த முறையில் கட்டுமானம் (Packaging) செய்து விற்பனை செய்திட 7 அரங்குக ளும் மற்றும் 3 அரங்குகளில் பல் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் (SHG Products) உள் ளிட்ட 45 வகையான பொருட் கள் விற்பனை செய்யப்பட்டன.

20.12 2024 முதல் 24.12.2024 வரை 5 நாட்கள் நடைபெற்ற உணவுத் திருவிழாவில் 3.20 லட் சம் எண்ணிக்கையிலான பொது மக்கள் கலந்து கொண்டு, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சுய உதவிக் குழுக் களின் தயாரிப்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் ஆயத்த உணவுகளை வாங்கிச் சென்றுள்ளனர் என்பது மகிழ்ச் சிக்குரிய ஒன்றாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நமது திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களும், மகளிரின் முகத்தில் காணும் மகிழ்ச்சியே நமது அர சின் சிறப்பான செயல்பாட்டிற் கான உண்மையான அளவு கோல் என்றுரைத்தார்கள்.

மகளிரின் மகிழ்ச்சியே மாநி லத்தின் வளர்ச்சி என்பதை நோக்கமாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் சாத னைகளுக்கு மணிமகுடமாய் அமைந்துள்ளது சென்னை மெரி னாவில் சிறப்புற நடைபெற்ற நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் தின் உணவுத் திருவிழா.

சென்னை மக்களே தங்க ளின் ஆதரவுக்கு நன்றி என தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வா தார இயக்கம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பா.சுகுமாறன் மறைவு!

திருவள்ளூர்,டிச.25-

திருவள்ளூர் கிழக்கு மாவட் டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பா.சுகுமாறன் (வயது 57) உடல்நலகுறைவின் காரணமாக நேற்று 24.12.2024 செவ்வாய்கிழமை 11.30 மணிய ளவில் மறைவு எய்தார். இளம் வயது முதலே கழகத்தின்பால் ஈடுபாடு கொண்டு ஆசானபு துர் கிளைக் கழக செயலாள ராக பணியாற்றியவர். இவர் 2013 முதல் 2014 வரை ஒருங்கி ணைந்த மீஞ்சூர் ஒன்றிய கழகச் பொறுப்பாளராக கழக பணி யாற்றியவர். கழகம் நிர்வாக ரீதியாக ஒன்றியங்கள் பிரிக்கப் பட்டபோது மீஞ்சூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு இதுநாள் வரை கழக பணியாற்றி வந்தார். இவர் கழகம் அறிவித்த போராட்டங்கள், ஆர்பாட்டங் களில் கலந்து கொண்டுள்ளார்.

இவருக்கு மலர்விழி என்கிற மனைவியும் சுமதி, திவ்யா என் கிற இருமகள்களும் உள்ளனர். இவரின் இறுதி ஊர்வலம் 25.12.2024 புதன்கிழமை காலை11.00 மணியளவில் கரு மாரியம்மன் கோயில் தெரு திரு வேங்கடபுரம் பொன்னேரியில் நடைபெறும்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர் களுக்கும், கழக தோழர்களுக் கும் ஆழ்ந்த இரங்கலை வருத் தத்தோடு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் தெரி வித்து கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செய லாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர்

ஆசானபுதூர் பா.சுகுமாரன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, டிச. 25-

மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆசானபுதூர் பா.சுகுமாரன் அவர்கள் நேற்று (24.12.2024) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பா.சுகுமாரன் இயற்கை எய்தினார். மறைவு செய்தி அறிந்து கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகர், பி. ஜெ.மூர்த்தி, எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், மு.மணிபாலன், டாக்டர் பரிமளம், கே.சுப்பிரமணி, ஆ.சத்தியவேலு ஜி.ரவிக்குமார், ஜான்(எ) பொன்னுசாமி, பி.முத்து, கா.சு.தமிழ்உதயன், அத்திப்பட்டு ஜி.ரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கலைஞர் நகர் தெற்குப் பகுதி - விருகம்பாக்கம் தொகுதி

138 'அ' வட்டச் செயலாளர் மு.அன்பழகன் மறைவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. – ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ.– க.தனசேகரன் அஞ்சலி!

சென்னை, டிச.25-

கலைஞர்நகர் தெற்குப்பகுதி விருகம்பாக்கம் தொகுதி, 138 'அ'வட்டச் செயலாளர் மு. அன்பழகன் நேற்று (24. 12. 2024 செவ்வாய்க்கிழமை) காலை 11. 30 மணியளவில் இயற்கை எய் தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது மறைவை அறிந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளருமான மா. சுப்பிர மணியன், தென்சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப் பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பி னர் ஏ.எம்.வி.பிரபா கர்ராஜா, மாநக ராட்சி நிலைக் குழுத் தலைவர் க. தனசேக ரன் கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செய லாளர் கே. கண்ணன், வடக்குப் பகுதிச் செயலாளர் மு. ராசா, சைதை மேற்குப் பகுதிச் செயலாளர் மாநகராட்சி 10வது மண்டலக் குழுத் தலைவர் மு. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் வா சுகிபாண்டியன் உள்ளிட்டோர் அன் னாரின் உடல் மீது மாலை வைத்து மரி யாதை செலுத்தி னார்கள்.

வட்டச் செயலா ளர்கள் இரா. செழி யன், சோ. செந்தில்குமார், பி. கே. குமார், அ. கதிரேசன், வி. ஏ. ராஜா, பகுதி அவைத்தலை வர் எஸ். உமாபதி, பகுதி துணைச் செயலாளர் அஜந்தா ரவி, மாவட்ட அமைப்பாளர் கள் ஆர். சசிகுமார், நிஷா சையத், கே.வி. எஸ். சுரேஷ், மாவட்டப் பிரதிநிதிகள் பாரிந கர் சசி, எம்

வீரா, நிர்வாகிகள் சண்மு கம், ஜம்பு முருகன், எ. அசோக், சபரி, சுரேஷ், சுதா, பொன்சே கர். நாகப்பன், மணிகண்டன், சிஎச். தினேஷ், க. ரவி, ஜெய், கேப்டன் குமார், மகாதேவன், குணசேகரன், வைத்தியலிங்கம் கோபி, எஸ்.எஸ்.சீனு. சுந்தர், வி. பிரபாகரன் ஆகியோரும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அவரது இல்லமான 34/ 121, பிள்ளையார் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை 83 என்ற முகவரியில் இருந்து இன்று (25. 12.2024) மாலை 4 மணிக்கு இறுதி ஊர்வ லம் புறப்பட்டு, ஜாபர்கான் பேட்டை பச்சையப்பன் 2வது தெரு மயான பூமியில் நல்லடக் கம் செய்யப்பட உள்ளது.

ஐயா! நின் நினைவிடத்தில் சூளு ரைப்போம்!

ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா. உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ.கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனானத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள். அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து.உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
" குவளைப்பூ" போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன். எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் "ஈழவர்"தம் உரிமை வென்றாய்!
"வைக்கம்போர் நூற்றாண்டின்" புகழில் நின்றாய்!
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

பட்டாலும் தொட்டாலும் தீட்டு! கண்ணில்
பார்த்தாலும் தீட்டென்றார்! அவரை யெல்லாம்
விட்டாயா? அதிரடியால் விரட்டி வைத்தாய்!
விடுதலையால். குடியரசரால் விடியல் தந்தாய்!
அட்டையைப்போல் உறிஞ்சும்அந்தக் கூட்டம். இன்றோ
"அம்பேத்கர்" பெயர்கூட தீட்டென் கின்றார்!
எட்டிஉதைப் போம்அந்த ஆண வத்தை!
ஈரோட்டு நெருப்பில்அதைப் பொசுக்கி ப்போம்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ. அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு "தளபதி"யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி "மனுதர்மம்" போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் "கைத்தடிக்கு" வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா.உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!

கவிச்சுடர் கவிதைப்பித்தன்